மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் குறை கூற வேண்டும் என்று சொல்லப்படவில்லை. விதி எப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லப் பட்டது. எடுத்ததற்கெல்லாம் ஜனநாயகம் தலைவிரித்தாட ஆரம்பித்தால், ஊராட்சி மன்றங்கள் சரியாக இயங்குமா ? ஊராட்சி, பேரூராட்சி இவைகளுக்கு வரி வசூல் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் சிற்றூர் ஆட்சிகளில் வரி வசூல் செய்யும் அதிகாரம் யாருக்கும் கொடுக்கப் படவில்லை. அந்தக் கிராமத்தின் கர்ணம், மணியம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தலைவர்கள் கூட தலையிட முடியாத நிலை இருந்து வருகிறது. இதனால் யாருடைய ஜனநாயக உரிமையையும் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 'ஜனநாயகம் தலைவிரித்தாட ஆரம்பித்தால்' என்று சொன்னார்கள். அதை 'ஜனநாயகத்தைத் தவறாகப் பயன்படுத்தினால்' என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Government have placed certain restrictions on the powers of appeal of the Panchayat Presidents. May I know, Sir, whether similar rules had been issued to the Executive Officers of those Panchayats so that they may not abuse their authority and whether any limit has been fixed on the amount by which the tax could be increased by such Executive Officers ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தற்பொழுது இருந்து வரும் வரிகளை உயர்த்தி அதன்மீது ஆட்சேபணை வருமானால் பத்து சதவீதத்திற்கு மேல் குறைக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

Financial Position of the Town Panchayats.

* 83. *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it has been brought to the notice of the Government that the financial position of the Town Panchayats is affected as a result of the orders of the Government enhancing the salaries of the employees and the scavengers working in those Town Panchayats ;

(b) if so, whether any financial aid was being given to those Town Panchayats which were financially weak;

(c) whether that financial aid has been stopped now; and

(d) if so, the reason therefor ?

ஊராட்சிகளின் நிதி நிலைமை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேரூராட்சிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும், தோட்டிகளுக்கும், அரசாங்கம் சம்பள உயர்வு கொடுக்க உத்திரவு இடுவதால், மேற்படி ஊராட்சிகளின் நிதி நிலைமை பாதிக்கப்படுவது அரசு கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில், பற்றாக்குறை நிதி உள்ள பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே நிதியுதவி கொடுத்து வந்திருக்கிறதா ?

(உ) அந்த நிதியுதவி தற்போது நிறுத்தப்பட்டு விட்டதா ?

(எ) ஆமெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். பேரூராட்சிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் துப்புரவு தொழிலாளர்களுக்கும் அரசாணை எண். 322 (ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை) நாள் 9—2—1971-ல், 2—10—1970 முதல் சம்பள உயர்வு கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஊதிய உயர்வினால் ஊராட்சிகளின் நிதிநிலை பாதிக்கப்படுவதால் அவைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நிதி உதவியின் அளவைத் திருத்தி நிர்ணயிக்க வேண்டும் என ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார். இந்த விஷயம் அரசுடைய பரிசிலனையில் இருக்கிறது.

(இ) ஆம்.

(உ) 1970–71-ம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கு நிதி உதவி கொடுக்கப்படவில்லை. 2—10—70 முதல் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டதால் போதிய நிதி உதவி அளிக்க வேண்டி, அதற்குரிய விகிதம் நிர்ணயிக்கக் கோரி ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்குக் கோரியுள்ளார். அதுவும் அரசுடைய பரிசிலனையில் இருக்கிறது.

(எ) புதிய விகிதத்தில் நிதி உதவி அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள செயற்குறிப்புகள் அரசின் பரிசிலனையில் உள்ளதால், பழைய முறையில் நிதி உதவி அளிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : டவுன் பஞ்சாயத்துகளுடைய நிதி நிலை குறைவாக இருக்கிறபோது, அரசாங்கம் சம்பளம், பஞ்சப்படி என்ற முறையில் துப்புரவு சிப்பந்திகளுக்கு ஏற்றிக்கொண்டே போகும்போது, உதவி இல்லாமல் பஞ்சாயத்துகள் சமாளிக்க முடியுமா என்பதை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மற்றவற்றிற் கெல்லாம் நிதி சரியாக இருக்கும்போது, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுப்பதால், அதிகமாகிவிடாது. மேலும் அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாகக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் மிகக் குறைவாக இருந்த காரணத்தால், சமீபத்தில் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் இணைத்துக் கொடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக இப்பொழுது எவ்வளவு அதிகமாக விருக்கிறது என்பதைப் பற்றி நமது உள்ளாட்சித் துறை பரிசீலனை செய்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, ஊராட்சியைப் பற்றி நான் கேட்கவில்லை. டவுன் பஞ்சாயத்துக்களைப் பற்றிக் கேட்கிறேன். துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஊராட்சிகளுக்குக் கொடுக்கின்ற காண்ட்ரிபூஷன் போல் டவுன் பஞ்சாயத்துகளுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஊராட்சி களும் சில பேரூராட்சிகளும் சரியான நிதி வசதியோடு இயங்கி வரவில்லை என்பதை அரசு அறியும். நிதி நிலையில் பற்றுக்குறை உள்ள பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே நிதியுதவி கொடுக்கப்பட்டுள்ளது. புதிய விகிதத்தில் நிதியுதவி கேட்கிற ஊரக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் பரிந்துரை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்குத் தெரிந்தவரை பேரூராட்சியில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட பணம் இல்லாமல் ஒரு நிலை இருந்து வருகிறது. அது போன்றவற்றிற்கு அரசு முன்பணமாக ஏதாவது கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இப்படி எந்தெந்தப் பேரூராட்சிகள் இருக்கின்றன என்று அரசின் கவனத்திற்கு வந்தால் கவனிக்கப்படும்.

1973 நவம்பர் 23]

திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, சிறிய பஞ்சாயத்துகள் எல்லாம் நகரப் பஞ்சாயத்துகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. பல பஞ்சாயத்துக்களில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாமலிருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு ஒன்று பஞ்சாயத்து யூனியன் மூலம் அல்லது நேரடியாக மேட்சிங் கிராண்ட் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் அமைக்கப்படுகின்றபோது சில மாற்றங்கள் செய்யப்பட்டன. உறுப்பினர்கள் அவர்கள் கூறியதைக் கருத்தில் கொண்டு, அவசியம் ஏற்படுகின்றபோது மறுபடியும் சிற்றூராட்சியாக மாற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி நேரம் ஒரு மணிதான் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, துப்புறவுத் தொழிலாளர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தியதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதனால் வருமானத்தில் அதிகச் செலவு ஏற்படும் ஊராட்சிகளுக்கு பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது தான் பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, பேரூராட்சியின் துப்புறவுத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அதிகப்படி ஊதியம் தர வேண்டுமென்பது நியாயமானது, அதை எல்லோரும் வரவேற்கிறோம். ஆனால் சில ஊராட்சிகளால் அதைக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சோளிங்கபுரம், கண்ணமங்கலம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளிலும் துப்புறவுத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அவர்கள் வேலை நிறுத்தம் கூடச் செய்திருக்கிறார்கள். அந்த ஊராட்சிகளுக்குப் பணம் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, குறிப்பிட்ட ஊராட்சிகள் பற்றி அரசுக்குத் தகவல் அனுப்பப்பட்டு ஊரக வளர்ச்சி இயக்குனர் சிபாரிசு செய்து அனுப்பினால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.